# நடப்பு நிகழ்வுகள்

# டிசம்பர் – 2022

# தேசிய செய்திகள்

## ஜி–20

- ஜி–20 நாடுகளின் தலைமை பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொண்டது.
- சர்வதேச பொருளாதாரம் தொடர்பான முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டதே 'நிதி அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுனர்களின் அமைப்பு.
- இந்த பிரபஞ்சம் முழுவதும் ஒன்றே என்னும் உணர்வை மேம்படுத்த பாடுபடும். எனவே , நமது கருப்பொருள் – 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்பதாகும்.
- இதில் இடம் பிடித்துள்ள 20 நாடுகளின் பட்டியல் :– இந்தியா, இந்தோனேசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, அர்ஜென்டினா, பிரேசில், சீனா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, கனடா, ஜப்பான், ரஷ்யா, தென்ஆப்பிரிக்கா, துருக்கி, தென்கொரியா, இத்தாலி, மெக்சிகோ, சவுதி அரேபியா, பிரான்ஸ், ஐரோப்பிய ஒன்றியம்.
- 1999 தொடங்கப்பட்ட ஜி–20 அமைப்பின் தலைமைப் பொறுப்பு ஒவ்வோர் ஆண்டும் மாறுகிறது. கடந்த ஆண்டு இந்–தோனேசியா தலைமை வகித்த நிலையில், கடந்த 1–ம் தேதி ஜி–20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றது.
- இந்தோனேஷியாவுக்கும் இந்தியாவுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு எப்போதுமே உண்டு. 1955–இல் இந்தோனேஷிய பான்டூங் நகரில் நடந்த ஆசிய – ஆப்பிரிக்க நாடுகளின் மாநாட்டில் தான், அன்றைய பிரதமர் ஜவாஹர்லால் நேருவால் முன்மொழியப் பட்ட அணிசாரா நாடுகளின் கூட்டமைப்பு உருவானது.
- இப்போது அதே இந்தோனேஷியாவின் பாலி தீவில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில், அந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பு சுழற்சி முறையில் இந்தோனேஷியாவிடமிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கிறது.
- இந்தியா சார்பில் ஜி–20 அமைப்பின் முதல் ஆலோசனைக் கூட்டம் ராஜஸ்தானின் உதய்பூரில் தொடங்கியது.
- மிக முக்கியமான சர்வதேச அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றிருப்பதை வரவேற்கும் விதத்தில், டிசம்பர் முதல் தேதி காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையிலான 100 முக்கிய வரலாற்றுச் சின்னங்கள் ஜி20 இலச்சினையுடன் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன.

- 'ஒரே உலகம், ஒரே குடும் பம், ஒரே வருங்காலம்' என்கிற இந்தியா அறிவித்திருக்கும் முத் திரை வாக்கியம், 'வசுதைவ குடும்பகம்' (அனைவரும் ஒரே குடும் பம்), 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்" ஆகியவற்றின் உணர்வைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது

## ஜிஎஸ்டி சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு விலக்கு

- ஜிஎஸ்டி சட்டத்தை வரிசெலுத்துவோருக்கு சாதகமான சட்டமாக மாற்றும் நோக்கில், இந்தச் சட்டத்தின் கீழான குற்றங்களை இந்திய தண்டனைச் சட்டத்தின் (ஐபிசி) கீழான தண்டனைக் குரிய குற்றங்களிலிருந்து நீக்குவது குறித்தும் கவுன்சில் கூட்டத்தில் பரிசீலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென, ஜிஎஸ்டி சட்டப் பிரிவு 132-இல் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களை ஜிஎஸ்டி அதிகாரிகளின் சட்டக் குழு இறுதி செய்திருக்கிறது

## ஐஎன்எஸ் விக்ராந்த் கப்பலுடன் போர் விமானம் இணைப்பு

- ஐஎன்எஸ் விக்ராந்த் விமானம் தாங்கிக் கப்பல் கடந்த செப்டம்பர் மாதம் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது . இது முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்ககப்பட்ட முதல் விமானம் தாங்கி கப்பல் ஆகும்.
- இந்தக் கப்பலுடன் போர் விமானங்களை ஒருங்கிணைக்கும் பணி நடைபெறுகிறது



- மகாராஷ்டிர மாநிலம் புனே மாவட்டத்தில் உள்ள தேசிய ராணுவ பயிற்சி மையத்தில் (என்டிஏ) 143-வது குழு பயிற்சி நடைபெற்றது. தற்போதய கடற்படை தலைமை தளபதியாக
- அட்மிரல் ஆர்.ஹரி குமார் உள்ளார்

## மண் வளம்:

- மண் வளம் குறைவதை தடுக்க மத்திய அரசு இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் என்ற திட்டம் செயல்படுத்த 1584 கோடி நிதி ஒதிக்கீடு செய்த்துள்ளது

10% இடஒதுக்கீடு தீர்ப்பு விவகாரம்:

- பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு பொதுப் பிரிவினருக்கு கல்வி, வேலைவாய்ப்பில் 10 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டம் 2019- ஆம் ஆண்டு 103 -வது சட்ட திருத்தம் மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது..

- 1992–ஆம் ஆண்டைய மண்டல் தீர்ப்பானது, பொருளாதார அளவு கோல் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க முடியாது என்று அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது.
- . இந்த மண்டல் தீர்ப்பை நிராகரிக்கும் வகையில் உள்ளது என அரசு தரப்பில் ஆர்.எஸ். பாரதி உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பானது 'பாகுபாட்டை சட்டபூர்வமாக்கும்'வகையில் உள்ளது என்று மறு ஆய்வு மன, தாக்கல் செய்தார்.

## தங்க நாணயம் வாங்க ATM

- தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் கோல்ட்சிக்கா நிறுவனம் தங்கத்தை விற்பதற்கு என்று ஏடிஎம் மெஷினை அமைத்துள்ளது.
- ஹைதராபாத்தை சேர்ந்த ஓப்பன்க்யூப் டெக்னாலஜிஸ் என்ற ஸ்டார்ட்அப் நிறுவனத்தின் உதவியுடன் தங்க ATM உருவாக்க பட்டுள்ளது என கோல்ட்சிக்கா நிறுவனத்தின் துணைத்தலைவர் பிரதாப் கூறினார்.

## ராணுவ தளவாட உற்பத்தி:

- உலக அளவில் உள்ள 100 மிகப் பெரிய ராணுவத் தளவாட நிறுவனங்களை சுவீடனைத் தலைமையிடமாகக் கொண்ட **ஸ்டாக்ஹோம்** சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (எஸ்ஐபிஆர்ஐ) பட்டியலிட்டுள்ளது. அதில் இந்தியாவைச் சேர்ந்த இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் (எச்ஏஎல்), பாரத் எலக்ட் ரானிக்ஸ் (பெல்) ஆகிய 2 பொதுத் துறை நிறுவனங்கள் இடம்பிடித்துள்ளன.

## கடல் அலையிலிருந்து மின்சாரம் சென்னை IIT கண்டுபிடிப்பு:



- கடல் அலைகளில் இருந்து ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் கருவியை சென்னை ஐஐடி ஆய்வுக் குழுவினர் வடிவமைத்துள்ளனர். 'சிந்துஜா–1'என அழைக்கப்படும் .
- இந்தக் கருவி தூத்துக்குடி கடலின் உள்ளே 6 கி.மீ. தொலைவில் 20 மீட்டர் ஆழத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவி தற்போது 100 வாட்ஸ் ஆற்றலை உற்பத்தி செய்யும்.




- அடுத்த 3 ஆண்டுகளில், கடல் அலையிலிருந்து ஒரு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் இலக்கு நிர்ணயம் செய்யப்பட் டுள்ளது..

## உச்ச நீதிமன்ற செயலி 2.0

- நீதித் துறை அதிகாரிகள் மற்றும் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் சிறப்பு அதிகாரிகளும் (நோடல்) உச்சநீதிமன்ற வழக்கு விசாரணை நடவ டிக்கை குறித்த தகவல்களை நிகழ்நேரத்தில் அறிந்து கொள்ளும் வகையில் 'உச்சநீதிமன்ற செயலி 2.0– வை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் புதன்கிழமை தொடக்கிவைத்தார்.

## நடப்பு நிதியாண்டில் GDP

- நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் ஜிடிபி 6.9 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி கணிப்பு வெளியிட்டுள்ளது. முன்னதாக, நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் ஜிடிபி 7.5 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி மதிப்பிட்டிருந்தது

## சர்வதேச தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கம்:

- இந்தியாவில் முதல் முறையாக சென்னயில் வரும்மார்ச் 23 முதல் 25– ஆம் தேதி வரை சர்வ தேச தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கம் நடைபெறுகிறது என்று மாநில தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.
- இந்தியாவில் முதல் முறையாக சென்னையில் தொழில் நுட்பம், தொழில்முனைவு, திறன் சமர்பிப்பு–யூமெஜின் மாநாடு என் னும் தலைப்பில் சர்வதேச கருத்த ரங்கம் நடைபெறுகிறது.
- இந்தியாவில் உயர்கல்வியில் பயிலும்பெண்கள் எண்ணிக்கை26 சதவீதமாக உள்ளது. அதேநேரத்தில் தமிழகத்தில் அது 50 சதவீதமாக இருந்தது. தற்போது முதல்வரின் புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் இந்த எண்ணிக்கை 66 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றார் அவர்.

## ஒரே நாடு ஒரே தேர்தல்:

- இந்திய அரசியலமைப்பு சட்டம் 1950– ஆம் ஆண்டில் அமலுக்கு வந்த பிறகு நாடாளுமன்றத்திற்கும் சட்டப்பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடந்தது. வாக்காளர் ஒவ்வொருவருக்கும் இரண்டு வாக்குகள்.

- ஒன்று நாடாளுமன்ற வேட்பாளருக்கு: மற்றொன்று சட்டப்பேரவை உறுப்பினருக்கு. மாநிலங்களில் எம்.எல்.ஏ.க்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மாநில முதலமைச்சராவார். மக்களவை எம்.பி.க்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இந்தியாவின் பிரதமராவார்.
- இந்தியாவின் தொடக்க காலநாடாளுமன்ற ஜனநாயக நடைமுறை. இந்தியாவில் 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்கள் இருக்கின்றன. 1952, 1957, 1962 ஆகிய மூன்று ஆண்டுகளில் முழுமையான ஐந்து ஆண்டுகளை மத்தியில் ஆளுங் கட்சி, ஆட்சியை நிறைவு செய்தது.
- அரசமைப்புச் சட்டத்தின் 356-ஆவது பிரிவைப் பயன்படுத்தி மத்திய அரசு மாநில அரசைக் கலைக்கலாம் என்பதை அன்று மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு, பஞ்சாப், கேரளம், மேற்கு வங்கம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் நிகழ்த்திக் காட்டியது. ஒன்பது மாநில அரசுகளை ஒரே நேரத்தில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி கலைத்தது வரலாறு!

## சாலையோர வியாபாரிக்கு பிரதமர் கடன் திட்டம்:

- சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் தற்சார்பு நிதி (பிரதமரின் ஸ்வாநிதி) திட்டத்தை வருகின்ற 2024-ஆம் ஆண்டு டிசம்பர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய வீட்டு வசதி, நகர்ப்புற வறுமை ஒழிப்புத்துறை இணையமைச்சர் கௌசல் கிஷோர் மக்களவையில் வியாழக்கிழமை தெரிவித்தார்.

## சர்வதேச தொழில்நுட்ப உச்சி மாநாடு:

- தமிழக அரசு சார்பில் வளரும் தொழில்நுட்பம் தொடர்பான சர்வதேச உச்சி மாநாடு சென்னையில் மார்ச் 23 முதல் 25-ம் தேதி வரை நடத்தப்பட உள்ளதாக அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்தார்.




- தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) சார்பில் 'தொழில்நுட்பம், தொழில் முனைவோர் மற்றும் திறன் வளர்ப்பு' என்ற கருத்துருவில் மாபெரும் உச்சி மாநாடு சென்னையில் அடுத்த ஆண்டு மார்ச் 23 முதல் 25-ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது.

## எல்காட்:

- தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) என்பது தமிழ்நாடு அரசு நிறுவனமாகும், இது இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் (1956) கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- எல்காட் நிறுவனம் தமிழக அரசின் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப திட்டங்களுக்கான விருப்ப கொள்முதல் முகமை ஆகும்.
- தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மையான தகவல் தொழில்நுட்ப மாநிலமாக மாற்றும் ஒரு பெரிய தொலைநோக்குப்பார்வையுடன், எல்காட் மூன்று பரந்த துறைகளில் சிறந்து விளங்குகிறது,
- தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப துறையை மேம்படுத்தவும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கான தகவல் தொழில்நுட்ப கொள்முதல் மற்றும் தமிழ்நாட்டிற்குள் சிறப்பான மின்னணு சேவைகளை வழங்கி வருகிறது.
- தமிழகம் 2030-ம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் பொருளாதார நிலையை அடைய இலக்கு வைக்கப்பட்டுள்ளது
- அதன் ஒரு பகுதியாக 'யூமாஜின் சென்னை ' என்ற தலைப்பில் மாபெரும் உச்சி மாநாடு சென்னையில் நடத்தப்பட உள்ளது.

## புளூ ஓஷன்' விருது:

- இந்த மாநாட்டில் 'புளூ ஓஷன்' விருதுகள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த விருது தொழில் முனைவோர் தங்களின் புதுமையான சிந்தனைகளை முன்னெடுக்க தொடக்கமாக இருக்கும்.
- மானஸ்வானியின் நிறுவனர் குலாட்டி மான்சி தனது 'முக யோகாவின் அற்புதங்கள்' புத்தகத்தை வெளியிட்டார், இது இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவால் பாராட்டப்பட்டது.

## மாநில தகவல் ஆணைய உயரதிகாரிகள் தேர்வு:

- தகவல் அறியும் உரிமை சட்டத்தின் அடிப்படையில் 2005-ல் மாநில தகவல் ஆணையம் தோற்றுவிக்கப்பட்டது.
- தகவல் ஆணையராக பணி யாற்றுவோருக்கு 3 ஆண்டுகள் பணிக்காலமாகும்.
- உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி அக்பர் அலி தலைமையில் தேர்வுக் குழு அமைக்கப்பட்டு
- தகுதியானவர்களை தேர்வு செய்து தமிழக அரசிடம் சமர்ப்பிக்கும்.
- அந்தப் பட்டியலில் இருந்து, தலைமை தகவல் ஆணை யர் மற்றும் 4 தகவல் ஆணையர்களை முதல்வர், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் கொண்ட குழு தேர்வு செய்யும்.

## மாநிலங்களவையில் மூத்த எம்.பி.க்களுக்கு முன்னுரிமை

- மாநிலங்களவையில் முக்கிய பிரச்சினை கள் குறித்து கருத்து கூற மூத்த எம்.பி.க்களுக்கு முன்னுரிமை வழங்க ப்படும் என ஜெகதீப் தன்கர் உறுதி அளித்தார். புதிய

குடியரசு துணைத் தலைவராக ஜெகதீப் தன்கர் கடந்த ஆகஸ்ட் மாதம் தேர்ந்தெடுக்கப்படார். குடியரசு துணைத் தலைவரே மாநிலங்களவையின் தலைவரும் ஆவார்

- உத்தரபிரதேச மாநிலம் மதுராவில், புனித யமுனை நதிக்கு சேலை அணிவிக்கும் 'சுனாரி மனோரத் ' திருவிழா நேற்று கொண்டாடப்பட்டது.

## காலநிலை மாறுபாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற துறைகளில் தொழில் முனைவோருக்கு சிறப்பு திட்டங்கள்.

- காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழக சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் துறையின் சார்பில் தமிழ் நாடு காலநிலை உச்சி மாநாடு.



- வளிமண்டல கார்பன் அளவு அதிகரிப்பால், புவிவெப்பம் அதிகரித்து காலநிலை மாற்றங்கள் நிகழ்கின்றன . இதனால் , மனிதர்கள் மட்டுமல்லாமல் பல்லுயிர்களும் பாதிக்கபட்டன.
  - கடந்தாண்டு கிளாஸ்கோ மாநாட்டில், பிரதமர் "இந்தியா வரும் 2070-ஆம் ஆண்டுக்குள் கார்பன் சமநிலையை எட்டிவிடும்"என்று அறிவித்திருந்தார்.

## பொதுசிவில்சட்டம்:.

- தனிப்பெரும்பான்மை பலத்துடன் இருப்பதால் எதுவும் சாத்தியமே என்றே நினைக்கிறது பி.ஜே.பி அரசு. ஏற்கெனவே தேர்தல் அறிக்கையில் சொன்ன விஷயங்களைத்தான் செயல்படுத்தி வருகிறது. பொது சிவில் சட்டமும் அதில் ஒன்றுதான். ஒருவேளை, இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டால் ஏற்கெனவே உள்ள தனிச்சட்டங்களில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும் என்று பார்ப்போம்...
- சுதந்திர இந்தியாவில் பெரிதும் விவாதிக்கப்பட்ட விஷயங்களில் நிச்சயம் பொது சிவில் சட்டத்திற்கு (Uniform Civil Code) ஒரு முக்கியமான இடமுண்டு. நீண்ட இடைவேளைக்குப் பிறகு தற்போது பொது சிவில் சட்டம் தொடர்பான விவாதங்கள் மீண்டும் எழத்தொடங்கியுள்ளன

- இந்திய அரசியலமைப்பின் வழிகாட்டு நெறிமுறைகளின்கீழ் உள்ள 44-வது பிரிவு ₹₹இந்தியா முழுமைக்கும் குடிமக்களுக்கு ஒரேவிதமான பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கலாம்" என்கிறது.




- சிவில் விவகாரங்களுக்குப் பொதுவான சட்டம் கொண்டுவர வேண்டும் என்கிற கோரிக்கைகளும் அரசியல் நிர்ணயசபை விவாதங்களில் தொடர்ந்து எழுப்பப்படுகின்றன. அதேஅளவிற்கு அதற்கான எதிர்ப்புகளும் இருக்கின்றன. ஆரம்பநிலையிலேயே கடும் எதிர்ப்புகள் கிளம்பிய காரணத்தால்தான் பொது சிவில் சட்டம் செயல் வடிவம் பெறாமல் போனது.
- தற்போது நடைமுறையில் ஒவ்வொரு மதத்தைப் பின்பற்றுவோர்க்கான சிவில் உரிமைகளை நிலைநிறுத்தும் தனிச்சட்டங்கள் இருந்துவருகின்றன.
- திருமணம், விவாகரத்து, வாரிசு, சொத்துரிமை, தத்தெடுத்தல், ஜீவனாம்சம் உள்ளிட்ட சிவில் விவகாரங்கள் குறித்து இந்தச் சட்டங்கள் தெளிவுபடுத்துகின்றன.
- இமாச்சல பிரதேச புதிய முதல்வர் (15–வது முதல்வராக) சுக்விந்தர் சிங் தேர்வு. குஜராத் மாநிலத்தில் 2–வது முறை பூபேந்திர படேல் முதல்வராக தேர்வு:
- இந்திய ஒலிம்பிக் சங்க முதல் பெண் தலைவராக தடகள வீராங்கனை பி.டி. உஷா தேர்வு.

## இளம் எழுத்தாளர்களுக்கான யுவா திட்டம்:

- தேசிய கல்விக் கொள்கையின் , இளம் எழுத்தாளர்கள் ஊக்குவிப்புத் திட்டம் (யுவா), மத்திய கல்வி அமைச்சகத்தால் கடந்த ஆண்டு அறிமுகம் செய்ய ப்பட்டது.நடப்பு கல்வியாண்டுக்கான (2022–23) யுவா–2.0 திட்டம், 'ஜனநாயகம்' என்ற கருப்பொருளில் அமல்படுத்தப்பட்டுள்ள து. இந்த திட்டத்தின்கீழ் 30 வயதுக்கு கீழான இளம் எழுத்தாளர்கள் கட்டுரை , கவிதை , கதை , நாடகம் உட்பட பல்வேறு வடிவங்களில் எழுதுவதற்கு ஊக்குவிக்கப்படுவர்.
- வால்சந்த் ஹிராசந்த் என்பவர் இந்தியாவில் விமானங்களை தயாரிக்க மை சூர் அரசாங்கத்துடன் இணை ந்து 1940–ல் ஹிந்துஸ்தா ன் ஏர்கிராப்ட் நிறுவனத்தை தொடங்குகிறார் .அந்த நிறுவனம் 1951 முதல் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் என்ற பெயரில் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது

## அபாயமான 6 பூச்சி கொல்லிகளுக்கு தடை

- மனிதன், விலங்கினங்களுக்கு அபாயம் விளைவிக்கும் என கண்ட றியப்பட்டுள்ள 6 பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு தமிழக அரசு தற் காலிக தடையும், மஞ்சள் பாஸ் பரசுக்கு முழுமையான தடையும் விதித்துள்ளது. இதுகுறித்து வேளாண்துறை செயலர் சி.சமயமூர்த்தி வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:

- பயிர்களுக்கு அபாயகரமான பூச்சிக்கொல்லி மருந்துகளை பாதுகாப்பாகப் பயன்படுத்துவதற்காக தேவையான பல்வேறு நட வடிக்கை தமிழகத்தில் எடுக்கப் பட்டு வருகிறது.
- இதற்கான உயர் நிலை குழுவின் ஆலோசனைக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மோனோக்ரோ பாஸ், ப்ரோபினோபாஸ், செப்கேட், சைபர்மெத்ரின் கலந்த ப்ரோபினோபாஸ், சைபர்மெத்ரின் கலந்த க்ளோர்பிரிபாஸ் மற்றும் க்ளோர்பிரிபாஸ் ஆகிய பூச்சிக்கொல்லி மருந்துகளை 60 தினங்களுக்கு தற்காலிகமாக தடைசெய்ய முடிவெடுக்கப்பட்டது.

## குளிர்காலக் கூட்டத் தொடர் புதிய மசோதாக்கள்:

- நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத்தொடர் டிசம்பர் 7 தொடங்கி நடைபெற்றுவருகிறது. ஆண்டுதோறும் நவம்பர் மாதம் நடைபெறும் இக்கூட்டத்தொடர், இமாச்சலப் பிரதேசம், குஜராத் மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல்களால் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறுகிறது. டிசம்பர் 29 வரை, 17 அமர்வுகளாக நடைபெறவுள்ள
- இந்தக் கூட்டத்தொடரில், 16 புதிய மசோதாக்களை அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. ஏற்கெனவே நிலுவையில் இருக்கும் 35 மசோதாக்களில் 7, இந்தக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன.
- நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் ஒன்றில் தாக்கல் செய்யப்படுவதன் மூலம், மசோதா ஒன்று சட்டம் ஆகிறது.
- நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள எவரும் புதிய மசோதாவைக் கொண்டுவரலாம், அறிமுகப்படுத்தலாம்.
- மத்திய அரசின் அமைச்சரவையில் இடம்பெற்றிருப்பவர் கொண்டுவருவது, 'அரசு மசோதா' என்றும் மற்ற உறுப்பினர்கள் கொண்டுவருவது, 'தனிநபர் மசோதா' என்றும் அழைக்கப்படும்.
- இது பல கட்ட விவாதங்களைக் கடந்து சட்டம் ஆகிறது. மசோதா ஒன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று சட்டம் ஆவதற்கு, சராசரியாக 261 நாட்கள் ஆகின்றன.

- ஜூலை 18 முதல் ஆகஸ்ட் 8 வரை நடந்த மழைக்காலக் கூட்டத்தொடரில், அமளியும் குழப்பமும் நிலவியதால் அவை பலமுறை ஒத்திவைக்கப்பட்டது.

- 17ஆவது மக்களவையின் இரண்டாவது மிக மோசமான கூட்டத்தொடராக அமைந்த இதில், எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் பலர் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

- மக்களின் தனியுரிமையை மீறுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்த தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதா, மக்களவையிலிருந்து திரும்பப் பெறப்பட்டது.

- விரிவான சட்ட வரையறைக்குள் பொருந்தும் திருத்தப்பட்ட வரைவு 'டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதா, 2022–ஐ மத்திய அரசு கடந்த மாதம் வெளியிட்டது. எனினும் நடப்புக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்ய அது பட்டியலிடப்படவில்லை.

**சிறுதானிய சாகுபடி**

- 2023– ஆண்டை உலக சிறுதானிய ஆண்டாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது. இதையடுத்து, சிறுதானிய உற்பத் தியை அனைத்து மாநிலங்களிலும் விரிவு படுத்தும் முயற்சியில் மத்திய அரசு தீவிரம் காட்டிவருகிறது.
- 2012–ஆம் ஆண்டு தமிழகம் உள்பட 14 மாநிலங்களில் 'சிறுதானிய இயக்கம்' அறி முகப்படுத்தப்பட்டது



- 2020– இல் உலக அளவில் 74 மில்லியன் ஹெக்டேரில் 89.17 மில்லியன்டன் சிறுதானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.
- ஆப்பிரிக்க நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் 1245 மில்லியன் ஹெக்டேரில் 15.53 மில்லியன் டன் சிறுதானியங்கள் விளைவிக்கப்பட்டுள்ளன. இதில் தமிழகத்தின் பங்களிப்பு 3.74 சதவீதம்.
- இந்தியாவில் அதிக அளவு சிறுதானிய சாகுபடி செய்யும் 21 மாநிலங்களில் 2021– இல் ராஜஸ்தான் 29.05 சதவீதத்துடன் முத லிடத்தில் இருந்தது. மத்திய பிரதேசம், கர் நாடகம், ஆந்திரம், தமிழகம் ஆகிய மாநிலங் கள் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளது.
- உலக அளவில் சிறுதானிய ஏற்றுமதியில் இந்தியா 5–ஆவது பெரிய நாடாக உள்ளது. 2020–21நிதியாண்டில் இந்தியா 26.97 மில் லியன் டாலர் மதிப்புக்கு ஏற்றுமதி செய் துள்ளது. உலக அளவில் சிறுதானிய ஏற்றுமதி 2019–இல் 380 மில்லியன் டாலராகவும், 2020–இல் 402.7 மில்லியன் டாலராகவும் அதிகரித்துள்ளது.

**ஜம்மு காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்துக்குக்கு எதிரான மனுக்கள்:**

- ஜம்மு–காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்த அரசியலமைப்புச் சட்டத் தின் 370–ஆவது பிரிவை மத்திய அரசு ரத்து செய்ததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்வது குறித்து பரிசீலிப்ப தாக உச்சநீதிமன்றம் தெரிவித் தது இந்த மனுக்கள் குறித்து விசா ரிக்குமாறு மனுதாரர்களில் ஒருவரும் கல்வியாளரும் எழுத்தாளரு மான ராதாகுமார் புதன்கிழமை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதி பி.எஸ். நரசிம்மா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் கோரிக்கை விடுத்தார்.
- கடந்த 2019, ஆகஸ்ட் 5–ஆம் தேதி அரசியலமைப்புச்சட்டப் ஆண்டு மார்ச் 2–ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, பிரிவு 370 தொடர்பான முந்தைய இரு வழக்குகளிலும்

மாறுபட்ட தீர்ப்பை உச்சநீதிமன்ற நீதி பதிகள் வழங்கியுள்ளதால் அதிக எண்ணிக்கையிலான நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாசன அமர்வு இம்மனுக்களை விசாரிக்க பரிந்துரைக்குமாறு ஜம்மு- காஷ்மீர்உயர்நீதிமன்றவழக்குரை ஞர்கள் சங்கம், என்ஜிஓஅமைப்பு உள்ளிட்டோர் கோரிக்கை விடுத்தன. இதனை ஏற்க நீதிபதிகள் மறுத்துவிட்டனர்.

- இந்த அமர்வில் இடம் பெற்றிருந்த முன்னாள் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி.ரமணா, நீதிபதி ஆர். சுபாஷ் ரெட்டி ஆகி யோர் ஓய்வு பெற்றுவிட்டனர்.
- இந்த மனுக்கள் விசாரிக்கப்பட உள்ள நிலையில், 5 நீதிபதிகளை உள்ளடக்கிய அரசியல் சாசன அமர்வை உச்சநீதிமன்றம் மாற்றியமைக்க உள்ளது13-ஆவது சட்டத் திருத்தம் .

## எல்லையில் ராணுவ உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் இந்தியா:


- இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் பீரங்கி நிறுத்துமிடங்களை உருவாக்குவது உள்ளிட்ட ராணுவ உள்கட்டமைப்புகளை இந்தியா மேம்படுத்தியுள்ளது.



- இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக் கும் இடையிலான 2,289 கி.மீ.தூர சர்வதேச எல்லையில் ஜம்மு பிராந்தியம் 192 கி.மீ. தூர எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது.
- ஆகஸ்ட் 17, 1947 அன்று, ராட்க்ளிஃப் கோடு என்று அழைக்கப்படும் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவைப் பிரிக்கும் எல்லைக்கோடு வெளியிடப்பட்டது. குஜராத்தில் உள்ள ரான் ஆஃப் கட்ச் வழியாக ராட்க்ளிஃப் கோடு பரவியுள்ளது ஜம்மு-காஷ்மீரில் உள்ள ஜம்முவில் உள்ள சர்வதேச எல்லை வரை இது நீள்கிறது.
- இரு நாடுகளுக்கும் இடையே கட்டுப்பாட்டு எல்லைக்கோடு காஷ்மீரில்தான் பெரும்பாலும் அமைந்துள்ளது. இது சுமார் 772 கி.மீ. தூரம் கொண்டதாகும்.
- வங்கதேசம் (4,096.7 கி.மீ), சீனா (3,488 கி.மீ), பாகிஸ்தான் (3,323 கி.மீ), நேபாளம் (1,751 கி.மீ), மியான்மர் (1,643 கி.மீ), பூடான் (699 கி.மீ), ஆஃப்கனிஸ்தான் (106 கி.மீ) ஆகிய இந்த ஏழு நாடுகளும் இந்தியாவுடன் எல்லையை பகிர்ந்துகொள்ளும் நாடுகள் ஆகும்.
- இந்தியாவும் பாகிஸ்தானும் ஜம்மு-காஷ்மீர் எல்லையில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை கடந்த 2021, பிப்ரவரி 20ஆம் தேதி புதுப்பித்த பிறகு இப்பணிகள் தொடங்கின.
- 
- ஜம்முவின் ஆர்னியா பகுதியில் இந்தியத் தரப்பு பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டபோது போர் நிறுத்த ஒப்பந்த மீறல் நிகழ்ந்தது. இதைத் தொடர்ந்து இந்திய

எல்லைப் பாதுகாப்புப் படைக்கும் பாகிஸ்தான் ரேஞ்சர்ஸ் படைப் பிரிவுக்கும் இடையே கொடி யமர்வுக் கூட்டம் நடைபெற்றது.

## முன்னால் பிரதமர் வாஜ்பாய்க்கு நினைவிடம்:




- குவாலியர், டிச. 25: மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பிறந்த குவாலியர் நகரில் அவருக்கு 4,050 ஹெக்டேரில் நினைவிடம் அமைக்க மத்திய பிரதேச அரசு இடம் ஒதுக்கியுள்ளது.
- 10 முறை மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றவர் . மாநிலங்களவை உறுப்பினராக இருமுறை இருந்துள்ள அவர் நாடாளுமன்றத்தில் 50 ஆண்டுகளுக்கு மேல் உறுப்னராக இருந்த பெருமைக்குரியவர்.
- கடந்த 2018–ஆம் ஆண்டு அவர் காலமானார். முன்னதாக 2015–ஆம் ஆண்டு அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- அவரது பிறந்த தினமான டிசம்பர் 25–ஆம் தேதி, தேசிய நல்லாட்சி தினமாக கடந்த 2014–இல் மத்திய
- பாஜக அரசால் அறிவிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் கொண்டாப்பட்டு வருகிறது.

## பொது சுகாதார காப்பீட்டு துறைகளில் இயங்க கூட்டு உரிமம்




- காப்பீட்டு சட்டங்கள் திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தபிறகு, பொது மற்றும் சுகாதார காப்பீட்டு துறைகளில் இயங்கும் வகையிலான கூட்டு உரிமத்தைப் பெற இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் (எல்ஐசி) திட்டமிட்டுள்ளது.
- நாட்டில் இதுவரை 4.2 சதவீத மக்களுக்கு மட்டுமே காப்பீட்டின் பலன்கள் கிடைத்து வருகின்றன.
- காப்பீட்டின்பலன்களை சமூகத்தின் மேலும் பல நிலைகளுக்குக் கொண்டுசெல்ல மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதைக் கருத்தில்கொண்டு காப்பீட்டு சட்டம்(1938), காப்பீட்டு ஒழுங்காற்று மேம்பாட்டு ஆணைய சட்டம் (1999) ஆகியவற்றில் திருத் தங்களை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## நீதிபதிகள் ஒய்வு வயதை உயர்த்த மத்திய நீதி துறை எதிர்ப்பு:

- உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயதை உயர்த்த மத்திய நீதித் துறை எதிர்ப்பு தெரிவித்துள்ளது
- உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 65. நாட்டில் உள்ள 25 உயர்நீதிமன்றங்களில் ஓய்வு பெறும் வயது62.

## 2022–ல் பெண்களின் முன்னேற்றம்

- அரசுப் பள்ளி மாணவிகளின் உயர் கல்வியை உறுதிசெய்வதற்காக அவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என தமிழக அரசின் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. பெண் கல்வி மீதான அக்கறையை வெளிப்படுத்துவதாக அமைந்தது.
- இந்திய மொழியில் எழுதப்பட்ட புத்தகத்துக்கான முதல் புக்கர் பரிசை "Tomb of Sand' நூலுக்காக கீதாஞ்சலிஸ்ரீ பெற்றது இலக்கியத்தில் முக்கியமான மைல்கல்.
- 2022இல் ஒரு வரதட்சணை மரணம்கூடப் பதிவாகாத மாநிலம் என்கிற பெருமையைத் தமிழகமும் இந்தியப் பெருநகரங்களில் பெண்கள் மீதான குற்றங்கள் குறைவான நகரம் என்கிற பெருமையைச் சென்னையும் பெற்றன. ஆனால், பெண்களின் பாதுகாப்புக்காக ஒதுக்கப்படும் நிர்பயா நிதியில், 10.7%ஐ மட்டுமே கடந்த ஆண்டுவரை தமிழக அரசு பயன்படுத்தியுள்ளது ஒரு நெருடல்.
- கிரிக்கெட்டில் ஊதியப் பாகுபாட்டைக் களைந்த நியூசிலாந்தைத் தொடர்ந்து, இந்திய கிரிக்கெட் வாரியமும் ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கு ஊதியம் வழங்கப்படும்

என அறிவித்து, விளையாட்டில் பாலினப் பாகுபாட்டைக் களைவதற்கான முதல் அடியை எடுத்துவைத்தது.

- பெண்கள் எதை உடுத்த வேண்டும் என்பது 2022இலும்கூடப் பற்றி எரிகிற பிரச்சினையாக இருக்கிறது. கர்நாடக மாநிலப் பள்ளி ஒன்றில் மாணவிகள் ஹிஜாப் அணிய விதிக்கப்பட்ட தடை, நாடு முழுவதும் விவாதப் பொருளானது



- கேரள கன்னியாஸ்திரி பாலியல் வல்லுறவு வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஃபிராங்கோ முல்லக்கல் விடுவிக்கப்பட்டது நாடெங்கும் அதிர்வலைகளை எழுப்பியது.
- 2002 குஜராத் கலவரத்தின்போது பில்கிஸ் பானு என்கிற இளம்பெண்ணைக் கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கிய வழக்கில் குற்றவாளிகள் 11 பேரையும் குஜராத் அரசு விடுவித்தது. இதை எதிர்த்து அவர் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மறுசீராய்வு மனுவும் நிராகரிக்கப்பட்டது.
- மொத்தத்தில், பெண்களுக்குப் பெரும் போராட்டமும் பகுதியளவு பெருமிதமும் நிறைந்ததாக 2022 அமைந்தது.

## மாபெரும் விவசாயிகள் பேரணி சம்யுக்தா கிஸான் மோர்ச்சா அறிவிப்பு:

- சண்டிகர் விவசாயிகள் சங்ககூட்டமைப்பான சம்யுக்தா கிஸான் மோர்ச்சா (எஸ்கேஎம்), ஹரியாணா
- மாநிலத்தில் வரும் ஜனவரிமாதம்26-ம்தேதி பெருந்திரள் விவசாய பேரணியை (கிஸான் மகா பஞ்சாயத்து) நடத்த முடிவெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

## ஓராண்டுக்கு இலவச உணவு தானியங்கள்:



- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவு தானியங்களை அடுத்த ஓராண்டுக்கு இலவசமாக விநியோகிக்க மத்திய அமைச்ச ரவை வெள்ளிக்கிழமை முடிவு செய்தது.
- தற்போது உணவுப் பாதுகாப்புச்சட்ட பயனாளிகளுக்கு மாதந் தோறும் ஒரு நபருக்கு தலா 5 கிலோ உணவு தானியங்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.
- பருப்பு, கோதுமை, அரிசி ஆகியவை முறையே ரூ.1, ரூ.2, ரூ.3 என்ற விலையில் வழங்கப்படுகிறது. உணவு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்வரும் அந்தியோதயா அன்னயோஜனா திட்ட பயனாளிகளுக்கு மாதம் 35 கிலோ உணவு தானியங்கள் விநியோகிக்கப்படுகின்றன.
- உணவுப் பாதுகாப்பு மசோதா இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதா ஆகும். மன்மோகன் சிங் பிரதமராயிருக்கும் போது 2013 –ஆம் இந்திய நாடாளுமன்றத்தில் இது தாக்கல் செய்யப்பட்டது. இம்மசோதாவின் நோக்கம் அனைவருக்கும் உணவு என்பதாகும்.
- நாடாளுமன்றத்தில் குரல் ஓட்டெடுப்பு மூலம் லோக் சபாவில் 26–ஆகஸ்டு மாதம் 2013 அன்று கொண்டுவரப்பட்டது.
- உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவு தானியங்களை அடுத்த ஓராண்டுக்கு இலவசமாக விநியோகிப்பது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்டுள்ளார்.
- சுமார் 81.35 கோடி மக் கள் பலனடையும் இந்த நடவடிக்கையால் அரசின் கருவூலத்துக்கு ரூ.2 லட்சம் கோடி கூடுதல் செலவாகும். இது, ஏழை மக்களுக்கான மத்திய அரசின் புத்தாண்டு பரிசாகும்' என்றார். மத்திய உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல்.

## வரலாற்று சின்னங்கள்;

- இந்திய தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இந்தியா முழுவ தும் 3,693 தொல்லியல் சின்னங்களும், இடங்களும் இருக்கின்றன.



- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் ஆய்விடங்கள், சிதைவு களைப் பேணிக்காப்பதற்கும், தொல்பொருள் அகழாய்வுகளை ஒழுங் குபடுத்துவதற்கும், சிற்பங்கள் செதுக்கு வேலைகள், அதையொத்த பிற பொருள்களைப் பாதுகாப்பதற்கும் வகை செய்வதற்கான சட்டம் 1958–இல் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் 2010–இல் திருத்தப்பட்டது.
- காணாமல் போன வரலாற்றுச் சின்னங்கள் குறித்தும், இந்தியாவி லுள்ள தொல்லியல் சின்னங்களின் பாதுகாப்பு குறித்ததுமான 324– ஆவது அறிக்கை மாநிலங்களவையில் கடந்த வாரம் தாக்கல் செய்யப் பட்டது.
- ஆய்வு செய்யப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்லியல் சின்னங்களில், குறைந்தது 24 சின்னங்கள் எங்கே மறைந்தன என்பதைக் கண்டறிய முடியவில்லை என்று தெரிவிக்கிறது அந்த அறிக்கை.

### நாடாளுமன்ற கூட்டத்தொடர் முன்கூட்டியே நிறைவு:

- 'இந்த ஆண்டு நாடாளுமன்ற கூட்டத்தொடர் 56 நாள்கள் நடைபெற்றுள்ளன; தொடர்ந்து 8–ஆவது முறையாக கூட்டத்தொ டர் முன்கூட்டியே நிறைவடைந்துள்ளது' என்று தன்னார்வ அமைப்பின் புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2020–ஆம் ஆண்டு நடைபெற்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் இருந்து கூட்டத்தொடர் நடைபெறும் நாள்கள் திட்டமிடப்பட்ட தேதிக்கு முன்பாகவே நிறைவடைந்துள்ளன. அந்த ஆண்டு மழைக்கால கூட்டத்தொடர் கரோனா பரவல் காரணமாக 10 நாள்கள் மட்டுமே நடைபெற்றது. இதுவே தற்போதைய 17–ஆவது மக்களவையின் பதவிக்காலத்தில் குறைந்த நாள்கள் நடைபெற்ற கூட்டத்தொடராகும்.
- இதனைத்தொடர்ந்து தற்போது நிறைவடைந்த குளிர்கால கூட்டத்தொடர் 13 நாள்கள் மட்டுமே நடைபெற்றுள்ளது. தொடர்ந்து 8–ஆவது முறையாக நாடாளு மன்ற கூட்டத்தொடர் முன்கூட்டியே நிறைவடைந்துள்ளது.

- மக்களவையை ஒத்திவைத்து அவைத் தலைவர் ஓம் பிர்லா கூறுகையில், 'குளிர்கால போது மக்களவை 13 அமர்வுகள் கூடியது. அவையின் செயல்திறன் 97 சதவீதமாக இருந்தது.
- 7 மசோ தாக்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது. துணைநிலை மானியக் கோரிக்கை மசோதா, கடற்கொள்ளை தடுப்பு மசோதா உள்ளிட்டவற்றுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது.

### உலகிலையே மிக உயரமான ஸ்ரீ கிருஷ்ணா சிலை:



- ஸ்ரீ கிருஷ்ணர் வாழ்ந்ததாக கருதப்படும் குஜராத் மாநிலம் தேவபூமி துவாரகை மாவட்டத்திலுள்ள துவாரகையில் உலகிலேயே மிக உயரமான ஸ்ரீ கிருஷ்ணர் சிலை அமைக்கப்பட உள்ளதாக குஜராத் மாநில அரசு சார்பில் தெரவிக்கப்பட்டது.
- ஸ்ரீ கிருஷ்ணர் துவாரகையில் வாழ்ந்ததாகவும், துவாரகையை ஆட்சி செய்ததாகவும் இதிகாச– புராணங்கள் கூறுகின்றன.
- இங்கு உலகப் புகழ்பெற்ற துவாரகாதீசர் கோயில் அமைந்துள்ளது. குஜராத்தின் நர்மதா மாவட்டத் தில் உலகிலேயே உயரமான (182 மீட்டர்) 'ஒற்றுமையின் சிலை' என்ற பெயரில் இந்தியாவின் இரும்பு மனிதர் என்றழைக்கப்ப டும் சர்தார் வல்லபபாய் படேல் சிலை நிறுவப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### விண்வெளி நிலைய சோயுஸ் கலத்தில் கசிவு:

- விண்கலத்தில் வெப்பத்தை தணிக்கும் கூலன்ட்டில் ஏற்பட்ட கசிவால், ரஷ்ய விண்வெளி வீரர்கள் விண்ணில் திட்டமிட்டிருந்த நடைபயணம் ரத்து செய்யப்பட்டது.
- 2 மாதங்களுக்கு முன், சர்வதேச விண்வெளி நிலையம் வந்தடைந்த சோயுஸ் MS–22 என்ற அந்த விண்கலத்திலின் பின்புறத்திலிருந்து, இன்று காலை வெள்ளைநிறத் துகள்கள்
- வெளியேறத்தொடங்கின. விண்கலத்தின் மின்சார அமைப்புகளின் வெப்பத்தை தணிக்கும் கூலண்டில் கசிவு ஏற்பட்டிருக்கலாம் என்றும், இதனால் விண்வெளி வீரர்களுக்கு எவ்வித ஆபத்துமில்லை என்றும் நாசா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

### நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பாதிக்கும் போராட்டங்கள்:

### கூடங்குளம் அணுமின் நிலையம்:

- தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் ரஷ்யாவின் ஒத்துழைப்புடன் அணுமின் நிலைய ம் கட்டும் பணி கட ந்த 2002–ல் தொடக்கியது இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இன்னொரு பக்கம், போராட்டக்காரர்களுக்கு வெளிநாட்டிலிருந்து நிதியுதவி வந்ததாக சில ஆதாரங்களை

சுட்டிக்காட்டி போராட்டக் குரல் எழுப்பிய சில குழுவினர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. நாளாவட்ட த்தில் போராட்டம் தணிந்தது.

- முதல் அணு உலை 2013–லும் 2–வது அணு உலை 2016–லும் செயல்பாட்டுக்கு வந்தது. இந்தத் தாமதத்தால் இவற்றுக்கான திட்ட செலவு ரூ.13 ஆயிரம் கோடியிலிருந்து ரூ.17 ஆயிரம் கோடியாக அதிகரித்தது.
- குஜராத்தில் நர்மதை ஆற்றின் குறுக்கே அணைகட்ட வேண்டும் என நாட்டின் முதல் துணைப் பிரதமர் சர்தார் வல்லபாய் படேல் விரும்பினார்.
- இந்த திட்டத்துக்கு முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அடிக்கல் நாட்டினார். 'சர்தார் சரோவர் அணை ' என்ற இந்த திட்டத்துக்கான கட்டுமானப் பணி 1987–ல் தொடங்கியது.
- இந்த திட்ட த்துக்கு எதிராக சமூக ஆர்வலர் மேதா பட்கர், 'நர்மதா பச்சாவ் அந்தோலன்' என்ற அமைப்பை தொடங்கி போராடினார். இ
- துமட்டுமல்லாமல் நீதிமன்ற வழக்கு காரணமாகவும் இந்த திட்டம் தாமதமான து. ஒரு வழியாக கட்டுமானப் பணி முடிந்து 2017–ல் தான் இந்த அணை திறக்கப்பட்ட து. இந்த திட்டம் நிறைவேற கிட்டத்தட்ட 70 ஆண்டுகள் ஆனது.

## சர்தார் சரோவர்அணை:

- குஜராத்தில் நர்மதை ஆற்றின் குறுக்கே அணைகட்ட வேண்டும் என நாட்டின் முதல் துணைப் பிரதமர் சர்தார் வல்லபாய் படேல் விரும்பினார். இந்த திட்ட த்துக்கு முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அடிக்கல் நாட்டினார். 'சர்தார் சரோவர் அணை ' என்ற இந்த திட்டத்துக்கான கட்டுமானப் பணி 1987–ல் தொடங்கியது.
- இந்த திட்ட த்துக்கு எதிராக சமூக ஆர்வலர் மேதா பட்கர், 'நர்மதா பச்சாவ் அந்தோலன்' என்ற அமைப்பை தொடங்கி போராடினார். இதுமட்டுமல்லாமல் நீதிமன்ற வழக்கு காரணமாகவும் இந்த திட்டம் தாமதமானது.
- ஒரு வழியாக கட்டுமானப் பணி முடிந்து 2017–ல் தான் இந்த அணை திறக்கப்பட்டது. இந்த திட்டம் நிறைவேற கிட்டத்தட்ட 70 ஆண்டுகள் ஆனது.

## மதுரவாயல் விரைவுச்சாலை:

- ஒரு கட்சி ஆட்சியின்போது அடிக்கல் நாட்டப்பட்ட திட்டத்தை மற்றொருகட்சி ஆட்சிக்கு வந்ததும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக கிடப்பில் போடுவது வாடிக்கையாக உள்ளது. உதாரணமாக மதுரவாயல் சென்னை துறைமுகம் இடையே விரைவுச் சாலை அமைக்க, 2009–ம் ஆண்டு அப்போதைய திமுக அரசு அடிக்கல் நாட்டியது.
- அதற்கு அடுத்து வந்த அதிமுக அரசு அந்த திட்டத்தை கிடப்பில் போட்டது இப்போது மீண்டும் ஆட்சிக்கு வந்த திமுக அரசு அதைச் செயல்படுத்த உள்ளது.
- ஆனால், காலதாமதம் காரணமாக இந்த திட்ட த்துக்கான செலவு ரூ.1,800 கோடியில் இருந்து ரூ.5,800 கொடியாக (3 மடங்கு) அதிகரித்துள்ளது.

## பாரத் நெட் திட்டம் செயல்படுத்த ரூ.184 கோடி நிதி ஒதுக்கீடு:

தமிழ்நாடு கண்ணா டி இழை வலையமைப்பு நிறுவனம் (டான்பி நெட் ) தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமப் பகுதிகளுக்கும் அதிவேக இணையதள இணைப்பு வழங்கும் பாரத்நெட் 2–ம் கட்டதிட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

- இந்நிலையில், 'பாரத்நெட் லாஸ்ட்மைல் கனெக்டிவிட்டி திட்டத்துக்கு ரூ.184 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஐசிஐசிஐ வங்கி கடன் மோசடி:**

- ஐசிஐசிஐ வங்கிக் கடன் மோசடி தொடர்பாக விடியோ கான் குழும நிறுவனர் வேணுகோபால் தூத்தை சிபிஐ கைது செய்தது.
- ஐசிஐசிஐ வங்கியின் தலைமை செயல் அதிகாரியாக சந்தா கோச் சார் பதவி வகித்தபோது, அந்த வங்கி சார்பில் விடியோகான் குழும நிறுவனங்களுக்கு ரூ.3,250 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- வங்கி ஒழுங்காற்றுச் சட்டம், ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல் கள், ஐசிஐசிஐ வங்கியின் கடன் கொள்கை ஆகியவற்றை மீறி, அந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளது.
- இதுதொடர்பாக இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றச்சதியுடன் தொடர்புள்ள பிரிவுகள், ஊழல் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைதுசெய்யப்பட்டார்கள்.
- நாட்டில் அதிக சைபர் கிரைம் காவல் நிலையங்கள் மாநிலங்களில் தமிழகம் (46) முதலிடத்திலும் மகாராஷ்டிரம் (43) இரண்டா மிடத்திலும் உள்ளன என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# மாநில செய்திகள்

**கீழ் பவானி பாசன திட்டம்**



- கீழ் பவானி பாசன திட்டம் உருவாக காரணமான தியாகி ஈஸ்வரனுக்கு சிலை அமைக்க அரசாணை வெளியீடு.
- ஈரோடு மாவட்டத்தில் அமைந்திருக்கும் பவானிசாகர் அணை ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய மண் அணை எனப் போற்றப்படுகிறது.
- கீழ்பவானி கால்வாய் பாசனத் திட்டம் என்பது மழைநீர் அறுவடை மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் ஆகும்.
- திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய 3 மாவட்ட விவசாயிகளுக்கும், லட்சக்கணக்கான விவசாய நிலங்களுக்கும் உயிர்நாடியாக இருப்பது கீழ்பவானி பாசன திட்டம். ஆகும்.
- தமிழக கால்வாய் பாசனத்தில், அதிக பாசன பரப்பளவு கொண்ட திட்டம் கீழ்பவானி பாசன கால்வாய் திட்டம் ஆகும் .

**பாரதி ஆய்வாளர் ஆ.இரா.வேங்கடாசலபதி:**

- பாரதி தொடர்பாக இவர், பாரதியின் 'இந்தியா' கருத்துப்படங்கள், பாரதியும் வ.உ.சி.யும், பாரதி: 'விஜயா' கட்டுரைகள், பாரதியின் சுயசரிதைகள்: கனவு, சின்ன சங்கரன் கதை, பாரதி கருவூலம்; பாரதி: கவிஞனும் காப்புரிமையும்; எழுக, நீ புலவன் ஆகிய நூல்களைத் தமிழிலும் Who Owns That Song?: The Battle for Subramania Bharati's Copyright என்ற நூலை ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். மேலும், பாரதி தொடர்பாக எண்ணற்ற ஆய்வரங்குகளில் பங்கேற்று, ஏராளமான கட்டுரைகளையும் ஆ.இரா.வேங்கடாசலபதி எழுதியுள்ளார்.
- வ.உ.சி.,புதுமைப்பித்தன், உ.வே. சாமிநாதையர் தொடர்பாக பல பதிப்பு நூல்களை வெளியிட்டுள்ள வேங்கடாசலபதி, தற்போது சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் (Madras Institute of Development Studies) இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்

**பொது சுகாதாரத் துறை:**

- தமிழகத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புக்கென பிரத்யேகத் துறை கடந்த 1922–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- பொது சுகாதாரத்துறை நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி பன்னாட்டு சுகாதார மாநாடு மாமல்லபுரத்தில் நடைபெற்றது.



- பன்னாட்டு சுகாதார நிலையத்தின் தலைமையகம் ஜெனிவா ஸ்விட்சர்லாந்து) உள்ளது. 7 ஏப்ரல் 1948 –ல் தொடங்கப்பட்டது

**குழந்தைத் தொழிலாளர்கள்:**

- தமிழகத்தில் 2020ஐ ஒப்பிட, கடந்த ஆண்டில் குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை 180% உயர்ந் திருப்பதாக , குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான பிரச்சார அமைப்பு (CACL) வெ ளியிட்டுள்ள புள்ளிவிவரம் , இந்தப் பிரச்சினையின் தீவிரததை உணர்த்துகிறது

**ஆசியாவின் சமூக தொண்டு பட்டியல்**

- ஃபோர்ப்ஸ் ஆசியாவின் சமூக தொண்டுக்கான 16 வது பதிப்பு பட்டியல் வெளியிட்டுள்ளது .அதன்படி, இந்தியாவில் சமூகதொண்டு பணிகளை கவுதம்அதானி அதிக அளவில் மேற்கொண்டு வருவதாக ஃபோர்ப்ஸ்தெரிவித்துள்ளது.

## தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில்

- தமிழக அரசு சார்பாக தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலில் பதிவுபெற்ற 3 மருத்துவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள். இந்த 3 உறுப்பினர் இடங்களில் ஒரு பெண் நியமிக்கப்படுவார்.
- 1914 முதல் 2022 வரை நடைமுறையில் இருந்த இந்த பெண்களுக்கான உரிமை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது




**வானிலை**

- அந்தமான் அருகே உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி நாளை 'மேன்டூஸ்' புயலாக வலுப்பெற்று 8-ம் தேதி வடதமிழக கரையை நெருங்கும்.
- இந்த புயலின் பெயரை பரிந்துரைத்த நாடு ஐக்கிய அரபு அமீரகம் ஆகும்.

## பரந்தூர் விமான நிலையம்:




- பரந்தூர் விமான நிலையம் அமைப்பதற்கான முன்னேற்பாடுகளை தமிழக அரசு விரைவுபடுத்தியுள்ளது. அதன்படி, தொழில்நுட்ப பொருளாதார ரீதியிலான விரிவான அறிக்கை தயாரிக்க ஆலோசகரை தேர்வு செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளியை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) வெளியிட்டுள்ளது.
- தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், தொழில் மூலதன முதலீட்டை ஈர்க்கவும், தனியார் தொழில் முனைவோர் மற்றும் மத்திய/மாநில அரசு நிறுவனங்களுடன் இணைந்து கூட்டாண்மை நிறுவனங்கள் மூலம் பெரிய / நடுத்தர தொழில் திட்டங்களை நிறுவ, 1965-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். மேலும், பெரும் முதலீடு மற்றும் அதிக

வேலை வாய்ப்புகளை அளிக்ககூடிய பெரிய தொழில் மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்களை மாநிலத்தில் நிறுவ டிட்கோ வழிவகை செய்கிறது.

- வேளாண் திட்டங்களை ஒருங்கிணைக்க புதிய செயலி
- வேளாண்மைத்துறை திட்டங்களை ஒருங்கிணைத்து பதிவுசெய்து பயன்படுத்தும் வகையில், 'நிலம் செயலி' எனும் மென்பொருள் சேவை நேற்று தொடங்கப்பட்டது.

## தமிழ் நாடு காலநிலை மாற்ற இயக்கம்

- தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்தை கண்காணிக்கும் வகையில், அதற்கென தனி இயக்கம் உருவாக்கப்படுகிறது.
- தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் திட்டத்தை செயல்படுத்த முதல்கட்டமாக ரூ.77.35 கோடி நிதி ஒதுக்கி, தமிழக அரசு உத்தரவிட்டது
- மாவட்ட அளவிலான காலநிலை மாற்ற இயக்கம் தொடங்கவும் ரூ.3.80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான காலநிலை மாற்ற இயக்கங்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைவராக இருப்பார்.
- மாநில அளவிலான இயக்கத் துக்கு முதல்வர் தலைவராக இருப்பார்.

## பயிர் சாகுபடி பணிகளில் ட்ரோன்கள்



- பயிர் சாகுபடிபணிகளில் ட்ரோன்கள், செயற்கை நுண்ணறிவு போன்ற நவீனதொழில்நுட் பங்கள் பயன்படுத்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக வேளாண் மைத் துறை செயலாளர் சி.சமய மூர்த்தி பேசினார்.
- மாநிலத்தில் மொத்தமுள்ள 130 லட்சம் ஹெக்டேர் நிலத்தில், 61.55 லட்சம் ஹெக்டேரில் பயிர் சாகு படி செய்யப்படுகிறது. 30.83 லட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களாக உள்ளன. இவற் றில் வேளாண்மையை பெருக்க சாதகமான வாய்ப்புகள் இருக்கின் றன. இதைக் கருத்தில் கொண்டே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது
- . தமிழகத்தில் ஆண்டு சராசரி மழைப் பொழிவு 973.2 மில்லி மீட்டராக உள்ளது. 50 சதவீத மழைப் பொழிவு வடகிழக்கு பருவமழையை நம்பியே உள்ளது.
- 2023-ஆம் ஆண்டு சர்வதேச சிறு தானிய ஆண்டாகக் கடைப்பிடிக் கப்பட உள்ளது. தமிழ்நாடு அரசு சார்பில் இயற்கை வேளாண்மைக்கான தனித்த கொள்கையும்

வெளியிடப்பட உள்ளது. உரிய நேரத்தில் விவசாயிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு, சாகுபடி குறித்து விவசா யிகள் கேள்வி எழுப்பினால் உடனடியாக அப்போதே விளக்கங்கள் அளிப்பது, சாகுபடி தொடர் பான மேலாண்மையில் ட்ரோன்களையும், செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில் நுட்பங்களையும் பயன்படுத்த அரசு திட்டங்களை வகுத்துள்ளது என்று வேளாண்மைத் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி தெரிவித்தார்.

## ஓவியர் மனோகர் தேவதாஸ் மறைவு:

- பத்மஸ்ரீ விருது பெற்ற பிரபல ஓவியர் மனோகர் தேவதாஸ் காலமானார் .
- ரெடினஸ் பிக் மெண்டோசா என்ற விழித்திரை நோயால் பாதிக்கப்பட்டு முப்பது வயதில் பார்வையை இழந்தார்.

## தமிழக அரசின் திட்டங்கள்:

- தமிழ்நாடு பசுமை இயக்கம் மூலம் காடுகளின் பரப்பை 21 சதவீதத்தில் இருந்து 33 சதவீதமாக அடுத்த 10 ஆண்டுகளுக்குள் உயர்த்த திட்டம், இதில் சுமார் 2.8 கோடி மரக்கன்றுகள் நடும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது . அண்ணா பல்கலைக்கழகத்தில் 'காலநிலை ஸ்டுடியோ ', தமிழகத்துக்கென தனியான மாதிரிகளை உருவாக்கவும், ரேடார்களை அமைக்கவும் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- கார்பன் சமநிலைக்கா க தமிழகத் தில் உள்ள 10 கிராமங்களை மீள்தன்மையுடை ய கிராமங்களாக மாற்றும் திட்டம் தொடங்ககிறது. காலநிலை அறிவு இயக்கம் செயல்படுத்தப்போகிறோம் . கடல் அரிப்பைத்தடுக்க , கடற்கரையின் பல்லுயிரியத்தை பேண பனை மரங்களை நடும் திட்டம் செயல் படுத்தப்படும்.
- இவை போன்ற அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைக்க நாட்டிலேயே முதல்முறையாக தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், 'பசுமை த் திட்டங்களுக்கான' அனுமதியை இனிமேல் ஒற்றைச் சாளர முறையில் வழங்கும்
- வகையில், தொழில்துறையில் உள்ள வழிகாட்டி நிறுவனத்தால் திட்டங்கள் வகுக்கப்படும். புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியை அதிகரிக்க வும், எடுத்துச்செல்லவும் தனியான பசுமை வழித்தடம் உருவாக்கப்படும்.

## 100 வயதை நிறைவு செய்ததெற்கு ரயில்வே தலைமையக கட்டிடம்:



- தெற்கு ரயில்வே தலைமையக கட்டிடம் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே அமைந்துள்ளது. சென்னையில் உள்ள பாரம்பரிய மிக்க கட்டிடங்களில் இதுவும் ஒன்று.
- 1915–ம் ஆண்டு பிப்.8–ம் தேதி இதன் கட்டமைப் புக்கு அடித்தளம் அமைத்தவர் அப்போதைய சென்னை கவர்னர் லார்டு பென்ட்லன்ட். இக்கட்டிடம், என்.கிரேசன் என்ற கட்டிடக் கலைஞரால் வடிவமைக்கப்பட்டு,
- பெங்களூருவை சேர்ந்த ஒப்பந்ததாரர் டி.சாமிநாத பிள்ளையால் கட்டப்பட்டது. இது, திராவிட பாணியை அடிப்படையாக கொண்ட இந்தோ– சாரசனிக் வகை அமைப்பாகும். பின்னர் , 1922–ம் ஆண்டு டிச.11–ம் தேதி அப்போதைய மெட்ரா ஸ் கவர்னர் ஃப்ரீமே ன் தாமஸ் வெலிங்டனின் மனைவியால் (லேடி வெ லிங்டன்) இந்த கட்டிடம் திறந்து வைக்கப்பட்ட து. இவ்வா று பல்வேறு சிறப்புகளை தாங்கி நிற்கும் இந்த பாரம்பரிய கட்டிடம் நேற்று 100–வது ஆண்டை நிறைவு செய்தது.

**அனைவருக்கும் நல வாழ்வு திட்டம் நாட்டிலேயே முதலிடம் பெற்று தமிழகம் சாதனை:**



- அனைத்து மக்களுக்கும் தரமான, இலவச மருத்துவ சேவை வழங்கப்படுவதை நோக்கமாக கொண்டது 'அனைவருக்கும் நலவாழ்வு திட்ட ம்'. ஆண்டுதோறும் டிச.12–ம் தேதி அனைவருக்கும் நலவாழ்வு திட்ட தினம் கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டில், 'நாம் விரும்பும் ஆரோக்கியமான எதிர்கால உலகத்தை அனைவருக்கும் உருவாக்குவோம் என்ற மையக் கருத்துடன் இதற்கான விழா, உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் கொண்டாப்பட்ட து. மத்திய, மாநில சுகாதாரத் துறை அமைச்சர்கள் , பொது சுகாதாரத்துறை நிபுணர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் அனைவருக்கும் நலவாழ்வு திட்ட த்தை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்கள் கவுரவிக்கப்பட்டன .

**சோழர்கால கல்வெட்டு கண்டெடுப்பு:**

- பாய்ச்சல் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட 11–ம் நூற்றாண்டு சோழர்கால கல்வெட்டு. செங்கம் அடுத்த பாய்ச்சல் கிராமத்தில் 11–ம் நூற்றாண்டில் கோயிலுக்கு தானம் வழங்கிய கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டதாக செங்கண்மா வரலாற்று ஆய்வு நடுவம் தெரிவித்துள்ளது

## மும்மொழிக் கல்வி கொள்கை:



- தமிழகப் பள்ளிகளில் மும்மொழிக் கல்விக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என சென்னையில் நடைபெற்ற மாநில கல்விக் கொள்கைக்கான கருத்துக் கேட்புக் கூட்டத்தில் தனியார் பள்ளி நிர்வாகிகள் வலியுறுத்தினர்.
- மத்திய அரசின் தேசிய கல் விக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மாநிலத்துக்க என பிரத்யேக கல்விக் கொள்கை உருவாக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. இந்த கல்விக்கொள்கையை வடிவமைக்க பெற்ற நீதிபதி த.முருகேசன் தலைமையில் 13 பேர் கொண்டகுழு அமைக்கப்பட்டுள்ளது.

## நகர்ப்புற கட்டமைப்பு:



- ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் ரூ.4,250 கோடி நிதியுதவியில் செயல்படுத்தப்படும் 3–வது கட்ட நீடித்த நகர்ப்புற கட்டமைப்பு திட்டத்துக்கான ஒப்பந்தங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பரிமாறப்பட்டன.
- இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KFW), தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை கள் நிறுவனம் (TNUIFSL) ஆகியவை இடையே திட்ட ஒப்பந்தம் மற்றும் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு

நிதி சேவைகள் நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான தனி ஒப்பந்தம் ஆகிய ஒப்பந்தங்கள், சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், பரிமாறப்பட்டன.

**பொறியியல் கல்லூரிகளில் தமிழ்ப்பாடம்:**

- தமிழகத்தில் பொறியியல் பயிலும் மாணவர்க ளுக்கு 'தமிழர் மரபு', 'தமிழரும் தொழில்நுட்பமும்' என்ற 2 புதிய தமிழ் மொழி பாடங்கள் இந்தஆண்டு முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன .

**இலங்கை தமிழர்களுக்கு அதிகார பகிர்வு:**

- இலங்கையில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பதை உறுதிப்படுத்தும் 13ஏ சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று, அதிபர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் இலங்கை நாடாளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டது

**அரசியல் சாசனத்தில் 13–ஆவது சட்டத் திருத்தம்**

- இலங்கையில் முழு அளவிலான உள்நாட்டுப் போர் உருவாகியிருந்த நேரத்தில், இனப் பிரச்னைக்கு தீர்வு காணும் முயற்சியாக இந்தியா – இலங்கை இடையே 1987–ஆம் ஆண்டு ஒப்பந்தம்




கையொப்பமானது. அதன்படி, இலங்கையின் அரசியல் சாசனத்தில் 13–ஆவது சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

- இந்த சட்டத் திருத்தம் மாகாண கவுன்சில்கள் உருவாக்கத்துக்கும், சிங்களர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகள் உள்பட 9 மாகாணங்களில் தமிழர்கள் சுயாட்சி மேற்கொள்ளும் வகையில் அதிகாரப் பகிர்வு கிடைப்பதையும் உறுதிப்படுத்தியது. கல்வி, ஆரோக்கியம், விவசாயம், வீட்டுவசதி, நிலம், காவல் துறை போன்ற பிரிவுகளில் மாகாண நிர்வாகங்களுக்கு அதிகாரம் தரப்பட்டது. ஆனால், நிதி அதிகாரங்களில் உள்ள கட்டுப்பாடுகள் காரணமாகவும், அதிபருக் குக் கொடுக்கப்பட்டிருந்த அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் கார ணமாகவும் மாகாண நிர்வாகங்களால் பெரிதும் முன்னேற்றம் காண முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய பெருங்கடலில் இருந்து வெளியேறிய சீன உளவுக் கப்பல்

- இந்தியப் பெருங்கடலில் முகாமிட்டிருந்த ஏவுகணை மற்றும் செயற்கைக்கோள்களைக் கண்காணிக்கும் சீன உளவுக் கப்பல் ஒரு வாரத்துக்குப் பிறகு இந்திய பெருங்கடலில் இருந்து வெளியேறியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
- நீண்ட தூர ஏவுகணை ஏவுவதற்கான சோதனை முயற்சிகளை இந்தியா மேற்கொள்ளப் போவதாக தகவல் அறிந்து கடந்த 5–ஆம் தேதி பல்வேறு கண்காணிப்பு வசதிகளைக் கொண்ட யுவான் வாங்வி' என்னும் சீன உளவுக் கப்பல் இந்திய பெருங்கடலில் நுழைந்தது.
- சீன உளவுக் கப்பலின் நடவடிக்கைகளை இந்திய கடற்படையினர் உன்னிப்பாக கவனித்து வந்தனர்.
- உளவுத் துறை நிபுணர் டேமியன் சைமன் தனது ட்விட்டர் பக்கத்தில் கடந்த திங்கள்கிழமை சீன உளவுக் கப்பல் இந்திய பெருங்கடலில் நுழைந்ததை உறுதிப்படுத்தினார்.
- கடந்த ஆகஸ்ட் மாதம் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில்சீன உளவுக் கப்பல் நிறுத்தப்பட்டது. இது, இந்திய–இலங்கை ராஜீய உறவுகளில் விரிசலை ஏற்படுத்தியது.



- இந்தியப் பெருங்கடலில் சீன ராணுவ மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்களின் ஊடுருவல் அதிகரித் துள்ள நிலையில் சீன உளவுக் கப்பலின் வருகை இந்தியாவுக்கு மேலும் கவலை அளிக்கும் விதமாக இருந்தது.

- இந்தியப் பெருங்கடலில் உள்ள நட்பு நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்த இந்தியா தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

- நாட்டில் 20 புதிய அணுமின் நிலையங்களை 2031 –ம் ஆண்டுக்குள் தொடங்க அரசு திட்டம்:

- அதிகரித்து வரும் மின் தேவையை ஈடு செய்யும் வகையில் மின் உற்பத்தி திறனை கூடுதலாக 15,000 மெகாவாட் அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக, வரும் 2031-ம் ஆண்டுக்குள் உள்நாட்டில் 20 புதிய அணுமின் நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த 20 புதிய அணுமின் நிலையங்களில் முதலாவதாக குஜராத்தில் கக்ரபாரில் அமைக்கப்பட்டு வரும் 700 மெகாவாட் திறன் கொண்ட புதிய அணுமின்நிலையம் வரும் 2023-ம் ஆண்டில் பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- , கல்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் 500 மெகாவாட் திறன் கொண்ட அணுஉலை 2024-ல் செயல்பாட்டுக்கு வரவுள்ளது.




- கூடங்குளத்தில் உள்ள தலா 1,000மெகாவாட் திறனில் அமைக்கப்பட்டு வரும் 2 புதிய அணு உலை பணிகள் 2027-ல் நிறைவடையும் என எதிர்பார்க்ப்படுகிறது

**தமிழ்-கன்னடத்துக்கு பாலமாக செயல்படும் நல்லதம்பி:**

- பெங்களூரு கன்னட எழுத்தாளர் நேமிசந்த்ரா, ஹிட்லர் ஆட்சியின் வன்முறை குறித்தும், அஹிம்சையின் முக்கி யத்துவம் குறித்தும் 'யாத்வஷேம்' என்ற நாவலை கடந்த 1995-ம் ஆண்டு எழுதினார்.
- இந்த நாவலை எழுத்தாளர் நல்லதம்பி தமிழில் மொழிபெயர்த்தார். ஹீப்ரு மொழியில் 'நினைவு சின்னம்' என்ற பொருளை தரும் 'யாத்வஷேம்' நூலை, எதிர் வெளியீடு கடந்த 2020-ம் ஆண்டு தமிழில் வெளியிட்டது.



- இந்த நூலுக்காக 2022-ம் ஆண்டின் சிறந்த மொழிப்பெயர்ப்பாளருக்கான சாகித்ய அகாடமி விருது எழுத்தாளர் கே.நல்லதம்பிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

- 2013-ம் ஆண்டு லங்கேஷின் கன்னட கவிதைகளை 'மொட்டு விரியும் சத்தம்' என்ற பெயரில் தமிழுக்கு மொழி பெயர்த்தார். இதை தொடர்ந்து கோஷிஸ் கவிதைகள்'என்ற பெயரில் கன்னடத்தில் சொந்த கவிதை நூலை வெளியிட்டார் .

.

- கன்னட த்தில் இருந்து சீனிவாசவைத்யா வின் 'ஓடை', விவேக் ஷான்பாக்கின் 'காச்சர் கோச்சர் ',வசுதேந்த்ராவின் 'மோகனசாமி' உட்பட 20 நூல்களை தமிழுக்கு மொழி பெயர்த்திருக்கிறார்.
- தமிழில் பெருமாள் முருகனின் மாதொரு பாகன் பூங்குழி புணர்ச்சி 'மாதொரு பாகன்', 'பூக்குழி','புணர்ச்சி ' ஆகிய நாவல்களையும், சுந்தர ராமசாமியின் 'ஒரு புளிமரத்தின் கதை ' நாவலையும் சேர்த்து 10 படைப்புகளை கன்னடத்திற்கு மொழி பெயர்த்திருக்கிறார்

## நம்ம ஸ்கூல் ஃபவுண்டேஷன்' தொடக்கம்:

- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டத்தை தொடங்கிவைத்துப் பேசியதாவது: அரசுப் பள்ளிகளை தனியார் பங்களிப்புடன் மேம்படுத்தும் முன்னோடித் திட்டமாக 'நம்ம ஸ்கூல் ஃபவுண்டேஷன்' திட்டம் தொடங்கப்பட்டது .
- தரமானக் கல்வி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் 2-வது இடத்தில் இருக்கிறது.



- நம்ம ஸ்கூல் ஃபவுண்டேஷன் திட்டத்தலைவரும், டிவிஎஸ் நிறுவனத் தலைவருமான வேணு சீனிவாசன் பேசும்போது, "மாணவர் களின் கல்வித் தரத்தை உயர்த்து வதற்கும் இந்த திட்டம் வழிவகுக்கும்" என்றார்.
- நல்லெண்ணத் தூதர் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் பேசும்போது, "தரமானக் கல்வி, நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், சிறந்த பள்ளிக்கட்டமைப்புகள், விளையாட்டு மற்றும் கல்விக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள், உடல் நலம் காப்பது உள்ளிட்டவை அடங்கியதாக நம்ம ஸ்கூல் ஃபவுண்டேஷன் திட்டம் அமைந்துள்ளது" என்றார்.
- பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசும்போது, "நம்ம ஸ்கூல் ஃபவுண்டே ஷன் திட்டத்தின் மூலம் தென்னிந்தியாவில் 2,500 பள்ளிகளைத் தத்தெடுத்துள்ளனர். அவற்றில் 2,000 பள்ளிகள் தமிழகத்தில் உள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது

# அறிவியல் செய்திகள்

- 'கெனைன் டிஸ்டெம்பர்' என்பது நாய்களுக்கு குளிர் காலத்தில் வரும் வலிப்பு நோய் ஆகும்.
- இந்தியாவில் தற்போது ₹காலா அஜார்' எனப்படும் கருங்காய்ச்சல் சவாலாக உருவெடுத்துள்ளது.மணல் கொசுக்கள் கடிப்பதால் இது பரவுகிறது. ஒருவருக்கு கருங்காய்ச்சல் ஏற்பட்டால் மாதக்கணக்கில் நீடிக்கிறது. ரத்த சோகை ஏற்பட்டு,உடல் எடை குறைகிறது

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்:

- ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஏவுதளத்திலிருந்து செலுத்தப்பட்ட முதலாவது தனியார் (Skyroot Aerospace Private imited) ராக்கெட்டான 'விக்ரம் எஸ்' வெற்றிகரமாகத் தனது இலக்கை அடைந்து வரலாறு படைத்தது

## உலகின் முதல் முதலாக மூக்கு வழியாக கொரோன மருந்து:

- உலகிலேயே முதல்முறையாக, மூக்கு வழியாக செலுத்தப்படும் கரோனா தடுப்பு மருந்துக்கு மத்திய மருந்துதரக்கட்டுப்பாட்டு அமைப்பு ஒப்புதல் வழங்கியுள்ளது.




- பாரத் பயோடெக் நிறுவனம் உருவாக்கியுள்ள இந்த தடுப்பு மருந்தை, அவசரகாலப் பயன்பாட்டின் அடிப்படையில், பூஸ்டர் டோஸாகப் பயன்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தடுப்பூசியை உருவாக்கிய பாரத் பயோடெக் நிறுவனம், தற்போது மூக்கு வழியாகச் செலுத்தப்படும் ÍNCOVACC கரோனா தடுப்பு தடுப்பு மருந்தை, வாஷிங்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து உருவாக்கியுள்ளது என்பதை அதன் நிறுவனர் கிருஷ்ணா எல்லா அறிவித்துள்ளார்.

**தொல்லுயிர் படிமங்கள் :**

- பல கோடி ஆண்டுகளுக்குமுன் பூமியிலிருந்த தாவரங்கள், விலங்குகள் உள்ளிட்ட உயிரினங்களின் உடல் சுண்ணாம்பு மண் போன்ற தாதுப்பொருளால் மூடப்பட்டு கல்லாக உருமாறிய நிலையில் கிடைப்பதை தொல்லுயிர் படிமங்கள் (fossils) என அழைக்கிறோம்
- . இவை பூமியில் அரிதினும்அரிதாக சில இடங்களில் மட்டும் கிடைக்கின்றன. சுண்ணாம்பு களி மண்ணால் ஆன பல சிறிய அடுக்கு களைப்போல இருக்கும் பாறை துண்டுகளை பிரித்தால் உள்ளே பழமையான தொல்லுயிர்தொல்லுயிர் படிமங்கள் இருப்பதை காணமுடியும்.



- தமிழ்நாட்டில் அரியலூர், விருத்தாசலம் , சிவகங்கை , திருப்பெரும் புதூர் பகுதிகளில் இவை அதிகம் காணப்படுகின்றன. திருப்பெரும்புதூர் வட்டம் , வெள்ளரை , குண்டு பெரும்பேடு பகுதி தொல்லுயிர்ப் படிமங்கள் நிறைந்த பகுதியாகும். இவ்விரு ஊர்களுக்கும் நடுவில்உள்ள ஏரியிலும்தொல்லுயிர்ப் படிமங்கள் நிறைந்து காணப்படுகின்றன.
- ஒலியை விட 5 மடங்கு வேகத்தில் செல்லும் இஸ்ரோவின் ராக்கெட் சோதனை வெற்றி.
- ஒலியைவிட 5 மடங்கு வேகத்தில் செல்லும் ஹைபர் சோனிக் தொழில்நுட்பத்தை விமானம், ஏவுகணை மற்றும் விண்கலங்களில் பயன்படுத்த முடியும். இந்த ஹைபர்சோனிக் தொழில்நுட்பம் மிகவும் நவீன தொழில்நுட்பம். இந்தியா, சீனா, ரஷ்யா, அமெரிக்கா உட்பட பல நாடுகள் ஹைபர்சோனிக் ஏவுகணை தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன.
- தற்போது ரஷ்யாவுடன் இணைந்து ஹைபர்சோனிக் ஏவுகணைகள் தயாரிப்பில் இந்தியா ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் அணு ஆயுதங்களை ஏவ முடியும். இந்த தொழில்நுட்பத்தை இந்தியா கடந்த 2019 மற்றும் 2020 செப்டம்பரிலும் பரிசோதித்துள்ளது.
- இந்த பரிசோதனையில் ஸ்கிராம்ஜெட் இன்ஜினுடன் கூடிய ராக்கெட் பயன்படுத்தப்பட்டது. இது மணிக்கு 7,500 கி.மீ. வேகத்தில் செல்லும் திறன் படைத்தது. இந்த ஹைபர்சோனிக் ராக்கெட் பரிசோதனையை இஸ்ரோ நேற்று வெற்றிகரமாக மேற்கொண்டது
- . ஒலியைவிட 13 மடங்கு வேகத்தில் செல்லும் ஏவுகணைகளை பரிசோதிக்க கூடிய, 12 ஹைபர்சோனிக் சுரங்கங்களை இந்தியா உருவாக்கியுள்ளது என அமெரிக்காவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க

**வானிலை:**


- 130 ஆண்டுகளில் 13–ஆவது புயல் மாண்டஸ் புயல் தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையத் தென்மண்டல தலைவர் பாலச்சந்திரன் கூறுகை யில், 'கடந்த 1891 முதல் 2021

வரையிலான 130 ஆண்டு காலத்தில் சென்னை, புதுச் சேரி இடையே 12 புயல்கள் கரையைக் கடந்துள்ளன'

- என்றார். மாண்டஸ் புயலும் மாமல் லபுரம் அருகே கரையைக் கடந்துள்ள நிலையில், அது சென்னை– புதுச்சேரி இடையே கரையைக் கடந்த 13–ஆவது புயலாகும்.

## பசுமை ஹைட்ரஜன்:

- பசுமை ஹைட்ரஜன் சார்ந்த தனி கொள்கை விரைவில் வெளியிடப்படும் என்று தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன் கூறினார்.
- தமிழ்நாடு பருவநிலை மாற்றம் குறித்த இரண்டாவது நாள் மாநாடு சென்னையில் நடைபெற்றது. இதில் எஸ்.கிருஷ்ணன் ஆற்றிய உரை தமிழ்நாட்டில் மரபுசாரா எரிசக்தி 5 மாதங்களுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், இந்த எரிசக்தியை சேமித்து வைப்பது முக்கியமானது.
- பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகள் தமிழ்நாட்டில் நிரம்ப உள்ளன. இதனைப் பயன்படுத்திக் கொள்ளவும், பசுமை ஹைட்ரஜனுக்காக தனித்த கொள்கையை உருவாக்கவும் பல்வேறு தரப்பினரிடம் ஆலோ சிக்கப்பட்டு வருகிறது. இதற்கான அறிவிப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்கெனவே வெளியிட்டுள்ளார்.
- தமிழ்நாட்டில் மொத்தமாக 130 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் உள்ளன. இவற்றில் விவசாயத்துக்காக 45 லட்சம் ஹெக்டேர் நிலம் பயன் படுத்தப்படுகிறது. ஆனால், 30 லட்சம் ஹெக்டேருக்கும் கூடுதலான நிலம் தரிசாக உள்ளது. பயன்பாட்டில் இல்லாமல் இத்தகைய நிலங்களை தொழில் ஆலைகளின் பயன்பாட்டுக்காக பயன்படுத்தலாம்.




- தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், 50 ஆயிரம் ஹெக்டேருக்கும் குறைந்த நிலங்களே பயன்படுத்தப்படுகிறது. இது மிகக் குறைந்த அளவாகும். தொழில் ஆலைகளுக்கான நிலங்களின் விலை அதிகமாக இருப்பதுடன், அவற்றை மேம்படுத்துவதற்கான செலவுக ளும் அதிகம் என்றார் அவர்.

## தோல் கழலை நோய்:

- நாடு முழுவதும் 29.45 லட்சம் கால்நடைகளுக்கு இதுவரை தோல் கழலை நோய் ஏற்பட்டது.இதை குணப்படுத்த 'லம்பிப்ரோவாக் இன்ட்' என்ற தடுப்பூசியை இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் கட்டுப்பாட்டில் ஹிசாரில் உள்ள குதிரைகள் தேசிய ஆராய்ச்சி மையம் உருவாக்கியது. 25.5 லட்சத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் இந்த நோய் பாதிப்பில் இருந்து குணமடைந்துள்ளன

## ஒமிக்ரான் பி.எப்.7 வைரசால் அதிக பாதிப்பு இல்லை:




- சீனாவில் பேரழிவை ஏற்படுத்தி வரும் கரோனாவின் ஒமிக்ரான் பி.எப்.7 வைரஸால் இந்தியா பெரிய அளவில் பாதிக்கப்படாது என்று மத்திய அரசின் சிசிஎம்பி ஆய்வு மையத்தின் தலைவர் வினய் கே.நந்திகூரி தெரிவித்துள்ளார்.
- இதில் மத்திய அறிவியல், தொழில் துறையின் கீழ் சிஎஸ்ஐஆர் அமைப்பு செயல்படுகிறது. இதன் கீழ் 38 ஆராய்ச்சி நிறுவனங்கள் செயல்படுகின்றன.
- ஹைதராபாத்தில் உள்ள உயிர்மம், மூலக்கூறு உயிரியல் ஆய்வு மையமும் (சிசிஎம்பி) ஒன்றாகும்.
- இந்தியர்களுக்கு 'ஹெர்டு இம் யூனிட்டி' என்ற மக்கள் பெருந்தொற்று தடுப்பாற்றல் உருவாகி இருக்கிறது.
- இதன் காரணமாகவே கரோனாவின் டெல்டா வைரஸ் பரவல் காலத்திலும்கூட இந்தியாவில் மோசமான விளைவுகள் ஏற்படவில்லை.
- சிஎஸ்ஐஆர் (அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி குழு) தலைமை இயக்குநர் பதவிக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த நல்லதம்பி கலைச்செல்வி நியமிக்கப்பட்டுள்ளார்.

## மூக்கு வழியாக செலுத்தும் மருந்தை பூஸ்டராக பயன்படுத்த அனுமதி



- பாரத் பயோ டெக் நிறுவனம் தயாரித்துள்ள மூக்குவழியாகச் செலுத்தும்
- கரோனா தடுப்பு மருந்தை 3– ஆவது தவணையாக (பூஸ்டர்) செலுத்திக் கொள்ள மத்திய
- அரசு அனுமதி அளித்துள்ளது.
- இந்நிலையில், ஊசி மூலமாக அல்லாமல் மூக்கு வழியாகவே செலுத்தும் கரோனாதடுப்பு மருந்தை பாரத் பயோ டெக் நிறுவனம் தயாரித்தது. அந்த மருந்தை 18 வயதைக் கடந்த நபர்களுக்கு செலுத்த இந்திய மருந்துப் பொருள்கள் தரக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் (டிசிஜிஐ)
- Drug Controller General of India( DCGI) கடந்த செப்டம்பரில் அவசரகால ஒப்புதல் வழங்கியது
- சுவாசப் மேற்பரப்பில் கரோனா தொற்று பாதிப்பு ஏற்படுவதை வழக்கமான கரோனா
- தடுப்பூசி தடுப்பதில்லை எனக் கூறிய பாரத் பயோடெக் நிறுவனம், அதற்குத் தீர்வுகாணும்
- நோக்கில் ' என்ற மூக்குவழியாகச் செலுத்தும் மூன்றாம் தடுப்பு மருந்தை தயாரித்தது. அந்த மருந்தை சுமார் 4,000 தன்னார்வலர்களிடம் அந்நிறுவனம் பரிசோதனை செய்தது. அதில் எவருக்கும் தீவிர பாதிப்புகள் எதுவும் ஏற்பட வில்லை என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.
- கட்ட ஆய்வில் மூக்குவழி தடுப்பு மருந்து போதிய நோய் எதிர்பொருளை உருவாக்கியதாகவும், பாதுகாப்பாகச் செயல்ப டுவதாகவும் பாரத் பயோடெக் நிறுவனம் தெரிவித்திருந்தது.
- மூக்குவழி கரோனா தடுப்புமருந்தை ஊசியின் அவசியமின்றி குறைந்த விலையில் தயாரிக்க முடியும் என்பதால், குறைந்த, நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் பெரிதும் பலனடையும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்திருந்தது.

## பிளாக் செயின் தொழில் நுட்பம்

- தமிழக சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவில் 'பிளாக் செயின்' தொழில்நுட்பம் அறிமுகம்செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு சார்பில் வெள்ளிக் கிழமை வெளியிடப்பட்ட செய் திக் குறிப்பு:
- இந்த'பிளாக்செயின்' தொழில் நுட்பத்தின் மூலம் சிலைக் கடத்தல், திருட்டு, விற்பனை குறித்து யாரேனும் இணையதளம் மூலம் புகார் அளித்தால், அவர்களைப் பற்றிய ரகசியம் காக்கப்படும். இந்தத் தொழில்நுட்பத்தால், சம்பந்தப்பட்ட அதிகாரி மட்டும் ஒருவரின் புகாரை இணையதளத்தில் காண முடியும்.

# விளையாட்டு செய்திகள்

- தமிழக டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமலுக்கு, மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருதை , குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று வழங்கினார்.

**சாம்பியன் பட்டம் வென்றது அர்ஜெண்டினா.**



- பிஃபா 22-வது உலகக்கோப்பை கால்பந்து தொடரின் இறுதி ஆட்டத்தில் லயோனல் மெஸ்ஸி தலைமையிலான அர்ஜெண்டினா அணி பெனால்டி ஷூட் அவுட்டில் 4-2 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது .
- 36 வருடங்களுக்குப் பிறகு தற்போது தான் அர்ஜெண்டினா வாகை சூடியுள்ளது. அந்த அணி உலகக் கோப்பை வெல்வது இது 3-வது முறையாகும்.

# முக்கிய தினங்கள்

- 1988 ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 1 ஆம் தேதி உலக எய்ட்ஸ் தினம் உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது

**இந்தியா கடற்படை தினம்:**

- இந்தியா கடற்படை தினம் ஆண்டுதோறும் டிசம்பர் 4 –இல் கொண்டாடப்பட்டு வருகிறது.
- 4.12.1971–இல் பாகிஸ்தானுக்கு எதிரான போரில் கராச்சி துறைமுகத்தில் புகுந்த இந்திய கடற்படை கடும் தாக்குதல்களை நடத்தி பெரும் வெற்றிபெற்றதை குறிப்பிடும் வகையில் கொண்டாடப்படுகிறது
- சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமையையும் நலனை யும் உறுதிசெய்வதுடன் அரசியல், சமூக, பொருளாதார , கலாச்சா ரம் ஆகிய தள ங்களின் ஒவ்வொரு அடுக்கிலும் அவர்களுக்கான சூழல் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் நோக்கில் ,
- டிசம்பர் 3ஐ 'சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமாக 1992இல் ஐ.நா., அறிவித்தது. இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளுக்கா ன சட்ட ம் 1995இல் இயற்றப்பட்டு, 1996 முதல் அமல்படுத்தப்பட்டது
- டிசம்பர் 4 ஆம் தேதி சர்வதேச வங்கிகள் தினம் கொண்டாடப்படுகிறது.
- டிசம்பர் 5 ஆண்டுதோறும் உலக மண் தினமாக கொண்டாடப்படுகிறது.
- பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டுக்கான சர்வதேச தன்னார்வலர் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 5 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- நாட்டின் ஒருமைப்பாட்டுக்காகவும், அவர்களின் கவுரவத்தை பாதுகாக்கவும் போராடிய வீரர்களின் நினைவாகவும் கடந்த 1949–ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் டிச.7–ம் தேதி கொடி நாளாக அனுசரிக்கப்ப டுகிறது.

- இந்திய ராணுவத்தின் சேவைப் பிரிவு தினம் ஆண்டுதோறும் டிசம்பர் 8–ம் தேதி கொண்டாப்படுகிறது. இதையொட்டி கர்நாடக தலைநகர் பெங்களூருவில் செயல்படும் ராணுவ சேவைப் பிரிவில் நேற்று விமான சாகச நிகழ்ச்சி நடைபெற்ற து. அப்போது விமானப்படை யின் சாரங்பிரிவினர் ஹெலிகாப்டரில் பல்வேறு சாகசங்களை நிகழ்த்தினர்
- சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று (டிச.10) கடைபிடிக்கப்படுகிறது.
- சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று (டிச.10) கடைபிடிக்கப்படுகிறது.
- . 1948–ல் ஐ.நா. பொதுச்சபை பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டதில் இந்தியாவின் பங்கு மகத்தானது.
- இந்தியாவில் மனித உரிமைகள் பாதுகாப் புச் சட்ட ம் 1993–ல் நிறைவேற்றப்பட்ட து. இச்சட்டத்தின் கீழ், மத்தியில் தேசிய மனித உரிமைகள் ஆணையமும், மாநிலத்தில் மாநில மனித உரிமைகள் ஆணையமும் நிறுவப்பட்டன.
- மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்ட பல மாநிலங்களில், தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தமிழகத்தில் மாநில மனித உரிமைகள் ஆணையம் 1997 ஏப்.17 முதல் செயல்பட்டு வருகிறது.

## வீர் பால் திவஸ்–'வீரச் சிறார்கள் தினம்

- சீக்கிய குருக்களில் ஒருவரான குரு கோவிந்த் சிங்கின் மகன்கள் ஜொராவர் சிங், ஃபதே சிங் ஆகியோர் முகலாய அரசர் ஔரங்க சீபின் படையினரால் கொல்லப்பட்டனர்.
- அவர்களது வீரத்தை நினைவுகூரும் வகையில் டிசம்பர் 26–ஆம் தேதியானது 'வீரச் சிறார் கள் தினமாக' (வீர் பால் திவஸ்) கொண்டாடப்படும் என பிரதமர் மோடி கடந்த ஜனவரியில் அறிவித்தார்.
- குரு கோவிந்த் சிங்கின் பிறந்த தினமான ஜனவரி 9–ஆம் தேதி இந்த அறிவிப்பு வெளியானது. இந்நிலையில், முதலாவது 'வீரச் சிறார்கள் தினம்' திங்கள்கிழமை கொண்டாடப்பட்டது.
- குரு கோவிந்த் சிங்கின் மகன்களை மதம் மாறக் கோரி ஔரங்கசீபின் படைகள் கட்டாயப்ப டுத்தின. அதை அந்தச் சிறார்கள் எதிர்த்தனர். அதன் காரணமாக அவர்கள் கொல்லப்பட்டனர். அந்தக் காலகட்டத்தில் ஔரங் கசீபின் தீவிர நடவடிக்கைகளை யும் இந்தியாவை அவர் மாற்ற முயன்றதையும் குரு கோவிந்த் சிங் எதிர்த்தார்.